**தலைப்பு 258 – கண்டி மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கண்டி மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கண்டி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கண்டி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.2 (அ) பந்தியில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமை

அரச கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 06 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதும் அத்தேவைப்பாடுகளிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திறைசேரி புத்தகங்கள் மற்றும் திணைக்களப் புத்தகங்களுக்கு இடையே வேறுபாட்டை சீராக்குவதற்காக கட்டுநிதி சீராக்கக் கணக்கிற்கு வைப்புக்கள், முற்பணம் மற்றும் ஏயைை திணைக்களங் களுக்காக செலவிடப்பட்ட செலவினங்களின் மொத்தம் ரூபா 45,189,298 ஆன பெறுமதி குறைத்து சீராக்கப்பட்டிருந்தது, | கணக்காய்வினால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கட்டுநிதிக் கணக்கில் சீராக்கப்படவில்லையென ஏற்றுக்கொள்வதுடன் அடுத்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பரீட்சை மீதியை பயன்படுத்துவதாகவும் திருத்திய சீராக்க கணக்கொன்று இதனுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு கட்டுநிதி சீராக்கக் கணக்கில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதி திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் ரூபா 7,577,381,360 ஆக இருந்த போதும் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான (ACA 6) கூற்றில் ரூபா 6,535,339,049 ஆக இருந்தமையால் ரூபா 1,042,042,311 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | குண்டசாலை பிரதேச செயலகத்தின் காணி, கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்களின் மீதி ரூபா 1,042,093,311 ஆல் அதாவது மும்மடங்கினால் அதிகரித்து Web Interface இல் காண்பித்தமையால் மாவட்ட செயலகம் மற்றும் பாதஹேவாஹட்ட மற்றும் மினிபே பிரதேச செயலகங்களின் இயந்திரங்களின் பெறுமதி ரூபா 51,000 ஆல் குறைத்துக் காண்பித்தமையால் இவ்வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகவும் | ஏசீஏ – 6 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் மீதிகள் திறைசேரி புத்தகங்களின் மீதிகளுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | (ACA - 6) நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஆரம்ப மீதிகள் மீளாய்வாண்டின் திறைசேரி சொத்துக்கள் அறிக்கையின் ஆரம்ப மீதிகளுடன் ஒப்பிடும் போது 10 சொத்து உருப்படிகளின் பெறுமதி ரூபா 4,157,647,226 கூடுதலாக திறைசேரி சொத்துக்கள் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திறைசேரி அறிக்கையில் 2020.01.01 இல் உள்ளவாறு மீதி மற்றும் 2019.12.31 இல் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் சொத்துக்களின் பெறுமதிக்கு இடையே வேறுபாடு வெளிப்படுத்த வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வதாகவும் 21 பிரதேச செயலகங்களிலும் 2019.12.31 இல் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு முடியாத நிதியல்லாத சொத்துக்கள் 2020 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டதாகவும் இப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் கையேற்றலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதாக. | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கைதவிர்ப்புகளின் பெறுமதி திறைசேரி சொத்துக்கள் அறிக்கையில் இறுதி மீதியுடன் ஒப்பிடும் போது பிரதேச | குண்டசாலை பிரதேச செயலகத்தின் 5 சொத்து உருப்படிகளில் ரூபா 25,077,310 ஆன கைதவிர்ப்பு பெறுமதி மும்மடங்கினால் அதிகரித்து Web Interface | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | செயலகமொன்றில் 5 சொத்து உருப்படிகளில் ரூபா 75,231,930 கூடுதலாகவும் 2 பிரதேச செயலகங்களில் இரண்டு சொத்து உருப்படிகளில் ரூபா 69,067 பெறுமதியொன்று குறைத்தும் திறைசேரி சொத்தக்கள் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்தது. | காண்பிக்கப்பட்மையாலும் விவசாய வாகனங்களின் கீழ் உடதும்பர பிரதேச செயலகத்தின் ஆரம்ப மீதி ரூபா 46,050 குறைத்து காண்பிக்கப்பட்டமையாலும் மெததும்பற பிரதேச செயலகத்தின் தளபாடங்கள் கைதவிர்ப்பு ரூபா 23,018 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டமையாலும் இவ்வேறுபாடு ஏற்பட்டதாக | |
| (ஈ) | மனித சக்தி மற்றும் தொழில் தொழில்வாய்ப்பு திணைக்களத்தின் பணிப்பாளரின் 2019 ஏப்ரல் 25 ஆந் திகதிய DOME/02/05-14 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 67,420 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் கணனி உபகரணங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இச்சொத்துக்களை 2021 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள அனைத்து நடைமுறையல்லாத சொத்துக்களின் கிரயம் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட திரட்டிய பரீட்சை மீதியின் பிரகாரம் ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 5,801,485,055 ஆன தேறிய செலவினம் காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 5,790,464,470 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதற்காக ஓய்வூதிய தலைப்பிலிருந்து செலுத்தப்பட்ட ரூபா 11,020,585 ஆன பெறுமதி விடுபட்டமை காரணமாக இருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட செலவினங்கள் பரீட்சை மீதியிலிருந்த பிரதி செய்யாத செலவினங்கள் அறிக்கைகளிலிருந்து பெற்றுக் கொண்டமை காரணமாக இவ்விடுபாட்டு தவறு இடம் பெற்றுள்ளதாகவும் அடுத்த ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பரீட்சை மீதியை அடிப்படையாக கொண்டு நடவடிக்கை எடுப்பதாக | ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்கள் என்பவற்றால் மாவட்ட செயலகத்திற்காக செலவிடப்பட்ட தேறிய செலவினம் காசுப் பாய்ச்சல் கூற்றில் தேறிய தொழிற்பாட்டு செயற்பாடுகளின் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தின் புத்தகத்தின் பிரகாரம் முற்பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவு முறையே ரூபா 117,490,677 மற்றும் ரூபா 101,836,253 ஆக இருந்த போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் முற்பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவு முறையே ரூபா 72,305,129 மற்றும் ரூபா 67,695,292 எனக் காண்பிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் முற்பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவு முறையே ரூபா 45,185,548 மற்றும் ரூபா 25,531,124 ஆன வேறுபாடு காணப்பட்டது. | திறைசேரி கணனி அச்சுப் பதிவு மற்றும் செலவின அறிக்கைகளை அடிப்படையாக கொண்டு நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தமையால் வேறுபாடு உருவாகியுள்ளதாகவும் அடுத்த ஆண்டில் கணக்குகளைத் தயாரிக்கும் போது பரீட்சை மீதியை அடிப்படையாக கொண்டு நடவடிக்கை எடுப்பதாக | முதலீட்டு செயற்பாடு களிலிருந்து உருவான காசாக காசுப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப் பட்டுள்ள முற்பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவு பெறுமதி திணைக்களத்தின் திரட்டிய பரீட்சை மீதியின் பெறுமதியுடன் சமப்பட வேண்டும். |
| (இ) | திணைக்களத்தின் புத்தகத்தின் பிரகாரம் வைப்பு பெறுவனவு மற்றும் கொடுப்பனவு முறையே ரூபா 855,364,694 மற்றும் ரூபா 1,086,836,756 ஆக இருந்த போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் முறையே ரூபா 855,360,944 மற்றும் ரூபா 1,086,809,005 என வைப்பு பெறுவனவுகள் ரூபா 3,750 மற்றும் வைப்பு கொடுப்பனவுகள் ரூபா 27,751 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது திறைசேரி கணனி அச்சுக் குறிப்பினை அடிப்படையாக கொண்டு மேற்கொண்டமையால் வைப்புக்கள் குறை வடைந்துள்ளதாகவும் அடுத்த ஆண்டில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பரீட்சை மீதியை அடிப்படையாக கொண்டு நடவடிக்கை எடுப்பதாக | காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலின் கீழ் உள்ள பெறுமதிகள் திணைக்களத்தின் திரட்டிய பரீட்சை மீதியின் பெறுமதிகளுடன் சமப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

--------------------------

### 2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019/2020 பெரும்போகத்திற்காகவும் 2020 சிறுபோகத்திற்காகவும் நெல் கொள்வனவு செய்வதற்கு நெல் சந்தைப்படுத்தல் சபையினால் மாவட்ட செயலகத்திற்கு 2 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 21 மில்லியனான முழுத்தொகையும் தெளிவான நடைமுறையொன்றின் அடிப்படையில் சிறிய மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர்கள் முன்வராமை காரணமாக திருப்பி அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | 2019/2020 பெரும்போகத் திற்காகவும் 2020 சிறுபோகத்திற்காகவும் நெல் கொள்வனவு செய்வதற்கு உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர்களுக்கு அறிவித்து நெல் | 2020 ஜனவரி 24 ஆந் திகதிய PS/EPC/06/2020 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

|  |  |  |  |
|---|---|---|---|
|  |  | அறுவடையை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் ஆலை உரிமையாளர் முன்வராமை காரணமாக பணம் மீள அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. |  |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| **அவதானிப்பு** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை-** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (அ) சட்டரீதியான ஏற்பாடுகள் | | | |
| 1968 இன் 32 ஆம் இலக்க ஆட்களைப் பதிவு சட்டம் மற்றும் 2016 இன் 08 ஆம் இலக்க ஆட்களை பதிவு செய்யும் (திருத்தச்) சட்டத்தின் 5.2 ஆம் பிரிவு | தெரிவுப் பரிசோதனையின் போது 12 பிரதேச செயலகங்களில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 542 பிரிவுகளில் 21 வயதை விடக் கூடிய 3,964 பேர் அடையாள அட்டைகளை பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | பிறப்புச் சான்றிதழ் அல்லது தனது பிறந்த திகதியை உறுதிப்படுத்த ஏதேனும் ஆவணம் ஒன்றில்லாத, வலது குறைந்த நபராக இருத்தல் மற்றும் பதிவேடுகளை தேடிக் கொள்ள முடியாமை, சில நபர்களின் பெயர், பிறந்த திகதி, பிறந்த இடம், பெற்றோர் மற்றும் சகோத சகோதரிகள் தொடர்பாக எவ்வித தகவலொன்றையும் சமர்ப்பிக்க முடியாமை போன்ற காரணங்களின் பேரில் குறித்த நிலைமை உருவாகியுள்ளதாக பஸ்பாக கோரலை மற்றும் தொழுவ பிரதேச செயலாளர்கள் அறிக்கையிட்டிருந்ததுடன் எஞ்சிய பிரதேச செயலகங்களில் தகவல் கோரல் மாத்திரம் இடம்பெற்றுள்ளதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | பொது நிர்வாக சுற்றறிக்கை<br>-------------------------------------- | | | |
| i | 2013 யூலை 08 ஆந் திகதிய HAF-3-ADMIN-02-002 ஆம் இலக்க பொது நிர்வாக அமைச்சு செயலாளரின் கடிதம் 4 ஆவது பிரிவு | 03 பிரதேச செயலகங் களின் 213 கிராம சேவை பிரிவுகளில் 02 மாதங்கள் முதல் 12 மாத காலப்பகுதிக்காக அத்துமீறிய பிடித்துக் கொள்ளல் தொடர்பான இரண்டு வார அறிக்கை கிராம சேவையாளர் களால் சமர்ப்பிக்கப்பட்டி ருக்க வில்லை. | உரிய திகதிகளில் சமர்ப்பிக்குமாறு அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் மீண்டும் அறிவிக்கப்பட்டுள் ளதாகவும் இது தொடர்பாக உதவி பிரதேச செயலாளரின் தனிப்பட்ட மேற்பார்வைக்கு உட்படக்கூடிய வகையில் நடைமுறையொன்று தயாரிக்கப்படுவதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii | 2019 மே 31 ஆந் திகதிய 14/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை | மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் மீளாய்வாண்டின் இறுதி வரை பாததும்பர மற்றும் உடதும்பற ஆகிய 2 பிரதேச செயலகங்களில் 74 ஓய்வூதியம் பெறுவோருக்கு ஓய்வூதியத்திற்காக 2019 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் மேற்கொள்ளப்பட திருத்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | போதியளவு தகவல் கோவையில் இல்லாமை காரணமென பாத்ததும்பற பிரதேச செயலகம் அறிக்கையிட்டிருந்ததாகவும் தகவல் பெற்றுக் கொள்வதற்குரிய நிறுவனங்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோரிடம் விசாரித்து கடிதங்கள் அனுப்பியுள்ளதாகவும் அத்தொடர்பு தொடர்பில் ஆலோசணை கோரி உடுநுவர பிரதேச செயலகத்தினால் 2021/04/08 ஆந் திகதி ஓய்வூதிய பணிப்பாளருக்கு கடிதமொன்று அனுப்பியுள்ளதாக | - மேற்படி - |
| (இ) | அரச கணக்குகள் சுற்றறிக்கை<br>---------------------------------- | | | |
| | 2001 திசெம்பர் 20 ஆந் திகதிய 13/2001 ஆம் இலக்க சுற்றறிக்கை | பாத்ததும்பர பிரதேச செயலகம் 31 ஓய்வூதிய கோவைகளுக்குரிய நடவடிக்கைகளை மீளாய்வாண்டின் இறுதி வரை மேற்கொண்டிருக்க வில்லை. | ஓ.நா பணிப்பாளர் நாயகத்தின் 2020/10/05 ஆந் திகதிய கடித்தில் இந்த அலுவலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட 31 கோவைகளை மீண்டும் தயாரித்து அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த காலஎல்லையில் ஓ.திணைக்களத்தின் பொது மக்கள் செயற்பாட்டிற்காக திறக்கப்படாமையாலும் தபால் திணைக்களத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்ததால் | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| | | 2021.02.15 மற்றும் 16 ஆம் திகதிகளில் கோவைகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் 2021.05.06 ஆந் திகதி மீண்டும் விசாரணை மேற்கொண்டுள்ளதாக |

**2.3 முற்பணங்களை வழங்குதலும் தீர்வுசெய்தலும்**

---------------------------------------------------------------------

**அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் தொடர்பான இணைக்கக்கூற்று**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தரொருவரிடமிருந்து ரூபா 136,620 ஆன கடன் மீதியும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரொருவரிடமிருந்து ரூபா 106,391 ஆன கடன் மீதியும் 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்படாமல் காணப்பட்டன. | ரூபா 136,620 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட ஒழுக்காற்று பரிசோதனை செயற்பாடுகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் ரூபா 106,391 ஆன கடன் மீதியை தீர்வுசெய்யுமாறு சட்டமா அதிபர் அறிவித்திருந்த போதும் கடன் தீர்வு இடம் பெறவில்லையென | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.4 வைப்பு மீதிகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 04 பிரதேச செயலகங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பராமரிப்பு காலம் முடிவடைந்த 170 செயற்திட்டங்களுக்குரிய மொத்தம் ரூபா 9,579,089 தொகையான நிறுத்தி வைத்தல் பணத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 01 மாதம் முதல் 01 ஆண்டிற்கு இடைப்பட்ட காலம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பாத்ததுதும்பர இரண்டு செயற்திட்டங்களினதும் உடுநுவர மூன்று செயற் திட்டங்களினதும் ஹாரிஸ்பத்துவ இரண்டு செயற்திட்டங்களினதும் பிடிகாசு விடுவிக்கப் பட்டுள்ளதாக | பராமரிப்புக் காலத்தின் இறுதியில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அறிக்கையொன்று பெற்றுக்கொண்டு பிடி காசை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

### 3.1 திட்டமிடல்

---------------------

அரச நிதித் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட 12 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டை அடிப்படையாக கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் செயற்பாடுகள் வரிசைப்படுத்த வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் தேவைப் பாட்டினைக் கவனத்திற் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டை அடிப்படையாக கொண்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தினை வரிசைப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக | செயல் நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டை அடிப்படையாக கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் செயற்பாடுகள் வரிசைப்படுத்த வேண்டும் |
| (ஆ) | மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது கணக்குகள், அபிவிருத்தி, காணி, சமூக சேவைகள் (முதியோர்), மாவட்ட காணிப் பயன்பாடு ஆகிய பிரிவுகளின் கீழ் 2020 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட சில செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை எனினும் செயலாற்றல் அறிக்கையில் அச்செயற்பாடுகளின் செயன் முன்னேற்றம் குறிப்பிட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட சில செயற்பாடு களுக்காக திட்டங்கள் குறிப்பிடப் படவில்லை. எனினும் அரசின் மூலம் நடப்பாண்டில் வெவ்வேறு காலப் பகுதியிலும் இறுதிக் காலாண்டிலும் உத்தேச விசேட திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்காக நிதிஏற்பாடு களை மேற்கொள்ளும் போது அச்செயற்பாடுகள் மேற்கொள்ளப் படுவதால் அச்செயற்பாடுகளுக்காக திருத்திய செயல்நடவடிக்கைத் திட்டத்தை சமர்ப்பிக்க போதுமான தேவையொன்று ஏற்படாததால் வெவ்வேறு பிரிவுகள் மற்றும் நிறுவனங்கள் மூலம் நிறைவேற்றப் படுகின்ற செயற்பாடுகளின் செயன் முன்னேற்றத்தை செயலாற்றல் அறிக்கையில் இறுதி செயன் முன்னேற்றத்திற்காக உள்ளடக்கப்பட்டிருந்ததாக | 12 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 சனவரி 12 ஆந் திகதிய MWGA/WB/ கி.க.ச/2017 ஆம் இலக்க இலங்கை மகளிர் பணியகத்தின் பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் மகளிர் செயற்பாட்டுக் குழுக்களை நிறுவி பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டில் உடுநுவர, மெததும்பற மற்றும் உடதும்பற ஆகிய 03 பிரதேச செயலகங்களின் 280 கிராம சேவையாளர் பிரிவுகளில் 31 மகளிர் செயற்பாட்டுக் குழுக்கள் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. | உடுநுவர, மெததும்பற மற்றும் உடதும்பற ஆகிய பிரிவுகளில் கணக்காய்வுச் சந்தர்ப்பத்தில் இருந்த நிலைமையை விட கருத்திற்கொள்ளக் கூடிய செயன்முன்னேற்ற ஒன்றை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் மகளிர் குழுக்களைப் பதிவு செய்வதற்காக தேவையான அங்கத்தவர் பணம் மற்றும் வங்கிக் கணக்கினை திறப்பதற்காக பணத்தை சேகரித்தல் அவர்களின் அதிக நிதிச் சிக்கல் காரணமாக தாமதமடைந்திருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டங்களை அடையாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபிரி கமக் மக்கள் பங்களிப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்குரியதாக விநியோகிக்கப்பட்ட நிதி மற்றும் பொருளதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் 2019 திசெம்பர் 06 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் 09 கூறுகளின் கீழ் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு | சபிரி கமக் மக்கள் பங்களிப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் முரண்பாடுகளைக் குறைத்து நாட்டை அபிவிருத்தி செய்தல் நோக்கமாக உள்ளதுடன் மக்களை கேந்திர பொருளாதார மொன்றை உருவாக்கும் நோக்கில் சகல | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் கண்டி மாவட்டத்தின் 20 பிரதேச செயலகங்களில் செயற்படுத்தப்படும் 3795 செயற்திட்டங்களில் 3670 அதாவது 97 சதவீதம் கிராமிய வீதி அபிவிருத்திக்குரிய செயற்திட்டங்களாக இருந்தமையால் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ள முடியாமல் இருந்தன. | பொருளாதார இலக்குகளை நிறைவேற்றுதல் இச்செயற் திட்டத்தின் நோக்கமாகும். ஆதலால் 09 கூறுகளின் கீழ் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதும் அச்செயற் திட்டங்களை இனங்காணும் போது பிரதேசத்தின் கிராமிய குழுக்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள் மற்றும் முன்மொழிவுகள் என்பன எந்தவொரு அரச உத்தியோகத்தரின் ஈடுபாடொன்று இல்லாமல் பெற்றுக் கொள்ளப்பட்டவை ஆகும். ஆதலால் மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் 09 கூறுகளுக்கு இடையே 08 கூறுகள் மிகைத்து கிராமிய வீதி அபிவிருத்திக்காக முன்மொழிவகள் சமர்ப்பிக்கப்பட்டதால் அச்செயற்திட்டங்களை செயற்படுத்த நேர்ந்ததாக சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானதாகும். | |
| (ஆ) | பஸ்பாக கோரளே பிரதேச செயலக பிரிவில் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களில் வசிக்கும் குடும்பங்களை மீள்குடியேற்றும் செயற் திட்டத்தின் கீழ் இனங் காணப்பட்ட 53 குடும்பங்களில் 10 பேருக்கு அரசினால் வழங்கப்படும் ரூபா 400,000 பணத்தில் மீள் குடியேற்றத்திற்காக பொருத்தமான காணியொன்றை இனங்காண்பதற்கு உள்ள சிக்கல் மற்றும் அத்தொகைக்கு மேலதிக ஏதேனும் செலவினத்தை மேற்கொண்டு காணியை கொள்வனவு செய்வதற்குரிய இயலுமை இக் குடும்பங்களுக்கு இல்லாமையால் மீள்குடியேற்றத்திற்கு | மேலும் 10 குடும்பங்களுக்காக மாத்திரம் மீள்குடியேற்றத்திற்கு காணியொன்றை இனங்காண வேண்டியுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பொருத்தமான காணியொன்றை இதுவரை இனங்காண முடியாதிருந்தது.

### 3.4 எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை (Outcome) பெற்றுக்கொள்ளாமை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கர்ப்பிணி சமயத்தில் உரிய நேரத்தில் உரிய போஷாக்கினை வழங்குதல் மற்றும் குறை நிறையுள்ள பிள்ளைகள் பிறப்பதை இலங்கையில் இல்லாதொழித்தலை முன்னனி நோக்கமாகக் கொண்ட மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் மூலம் கர்ப்பினி தாய்மார்களுக்கு வழங்கும் ரூபா 20,000 ஆன போஷாக்கு படிகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 20 பிரதேச செயலகங்களில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 7102 சந்தர்ப்பங்களில் ரூபா 14,204,000 ஆன போஷாக்கு படிகளைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | கொவிட் 19 நோய் நிலைமை காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட பிரிவுகளில் உள்ள தாய்மார்களுக்கு பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனமை, உறுதிச்சீட்டுக்களைப் பெறும் சகல தாய்மாரும் அப்பொருட்களைப் பெற்றுக் கொள்ள முன்வராமை கருக்களைதல் தொடர்பாக தாய்மார்கள் தொடர்பான தகவல்கள் பிரதேச செயலகத்திற்கு அறிக்கையிடப்படாமை, குழந்தை பிரசவத்திற்காக வேறிடங்களுக்குச் செல்லல் இந்நிலைமைக்கு காரணங்களாக இருந்ததாக | எதிர்பார்க்கப்பட்ட நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திவிநெகும திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட வாழ்வதார சுழற்சி நிதியக் கணக்கில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மீதி ரூபா 169,488,100 ஆக இருந்ததுடன் அதில் கடன் வழங்கி நிலுவையான மீதி ரூபா 99,517,949 தொகை மற்றும் மேலும் வழங்க கூடிய கடன் நிதிய மீதி ரூபா 69,970,151 ஆக இருந்தது. அதன் பிரகாரம் | 2020 ஆம் ஆண்டில் வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்களுக்கு வாழ்வாதார அபிவிருத்திக் கடன் வழங்குதல், சுழற்சிக்கடன் வெற்றிகரமான செயற்திட்டத்திற்காக மாத்திரம் செயற்படுத்துதல், கொரோனா தொற்று காரணமாக வியாபாரங்கள் தடைப்பட்டதன் பேரில் கடன் எடுத்தல் குறைவடைந்தமை, தொழில் முயற்சியாளர்களின் கடன் மீளச்செலுத்துதல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் | நலனாலிகளுக்கு ஆகக்கூடிய சேவைகள் வழங்கக் கூடிய வகையில் சுழற்சி கடன் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நலனாலிகளை வலுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் கடன் வழங்கும் செயற்பாட்டின் ஒட்டுமொத்த மீதியில் 40 சதவீதத்திற்கு அண்மித்த அளவொன்று வழங்ககூடியதாக இருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | கடன் வழங்குதல் சிக்கலாக இருந்தமை, சமூக நல வங்கி சங்கத்தின் மூலம் செயற்படுத்தப்படும் மொத்த கடன் நிகழ்ச்சித்திட்டங்களில் குறைந்த செயன்முன்னேற்றம் இக்கடன் திட்டங்களுக்காக தாக்கமளித்தல் போன்ற காரணங்கள் இதற்காக தாக்கமளிருந்திருந்த போதும் 2021 ஆம் ஆண்டின் போது இச்சுழற்சி நிதியத்திலிருந்து கடன் வழங்குவதற்காக நடவடிக்கை எடுப்பதாக வங்கி முகாமையாளர்களால் அறிவிக்கப்பட்டிருந்ததாக | |
| (இ) | பஸ்பாக கோரளே பிரதேச செயலக பிரிவில் செயற்படுத்தப்படும் கொரவக் ஓயா நீர் மின் நிலையம் மற்றும் பகரண்டா மின் நிலையம் ஆகிய 02 இற்கும் நீரைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேச செயலகத்திலிருந்து அனுமதியை பெற்றுக் கொள்ளாமல் இருந்ததுடன் மின் உற்பத்தி (மெகா வொட் மணித்தியாலம்) அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய நீர் திருப்பல் கட்டணம் செயற்திட்டத்தின் ஆரம்ப முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இன் கீழ் உள்ள 02 சிறிய நீர் மின்சாரத் திட்டங்கள் செயற்படுத்தப்படும் காணியின் உரித்து தொடர்பாக வழக்கொன்று விசாரிக்கப்பட்டு வருவதாகவும் ஆதலால் காணியை கையேற்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதெனவும் வரியை அறவிடுவதற்காக தேவையான ஆவணங்கள் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பிரதேச செயலக பிரிவில் செயற் படுத்தப்படும் செயற் திட்டங்களுக்காக அரசின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஈ) | உடதும்பற பிரதேச செயலக பிரிவில் ரூபா 1,093,731 தொகை செலவிடப்பட்டு தலகுனே கொட்டுவே லந்த கிராமிய நீர் முன்மொழிவு செயற்திட்டத்தின் கீழ் கிணறொன்று அமைக்கப்பட்டிருந்த போதும் நீர் வழங்கல் இடம் பெற்றிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் II ஆம் கட்டத்தின் கீழ் பம்பியறையை பூர்த்தி செய்வதற்கும் படிப்படியாக நலனாலிகளுக்கு நீரை வழங்குவதற்கும் 2021 அபிவிருத்தி முன்மொழிவுகளின் கீழ் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக | செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்திற்காக இலங்கை அரசின் இணையத்தள செயற்திட்ட வசதிகளைப் (LGN 2.0) பெற்றுக் கொள்வதற்கு உரிய இலங்கை தகவல் மற்றும் தொழில்நுட்ப முகவராண்மை (ICTA) மற்றும் பிரதேச செயலகத்திற்கு இடையே கையொப்பமிடப்பட்டிருந்த போதும் அத்தேவைப்பாட்டை நிறைவேற்று வதற்கு முடியாதிருந்தமையால் நிறுவனத்தினல் காணப்படும் தரவு பரிமாற்றல் வேகம் குறைவடைந்தமை அலுவலக வேலைகளுக்காக தடையாக காணப்பட்டது. | இந்த அலுவலகத்தின் புதிய கட்டிடத்திற்காக LGN 2.0 இணைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டு ICTA நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதும் ICTA நிறுவனம் மற்றும் டெலிகொம் நிறுவனத்திற்கு இடையே உடன்படிக்கை நாளது வரையாக்கப்படாமையால் புதிய இணைப்பை வழங்க முடியாதென அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் படி இதுவரை புதிய கட்டிடத்திற்கு LGN 2.0 இணைப்பு வழங்க முடியவில்லையென | செயற்திட்ட காலப்பகுதியில் சேவையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 ஏனைய அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தும்பனே பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 4,000,000 ஆன மதிப்பீடு செய்யப்பட்ட தொகைக்கு ஓபல்ல கிராம சேவையாளர் பிரிவின் நீர் முன்மொழிவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது, நீர் செயற்திட்டத்தின் நிர்மாண இடத்தின் காணி பிரதேச செயலாளர் பெயரில் முறையாக உறுதியொன்று மூலம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பௌதீக பரிசோதனையின் போது ரூபா 775,161 ஆன 18 வேலை விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நீர் செயற்திட்டத்தின் நிர்மாண இடத்தின் உரித்தினை பிரதேச சபைக்கு உறுதியொன்றின் மூலம் கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் இதுவரை அதனை சட்ட ரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பௌதீக பரசோதனையின் போது நிறைவேற்றப்படாத உருப்படிகள் தற்போது நிறைவேற்றப் பட்டுள்ளதுடன் அதற்குரிய பணத்தை பிடிகாசாக வைத்துக் கொண்டு தாமதக் கட்டணங்கள் அறவிட்டு பட்டியலில் எஞ்சிய பெறுமதியை எதிர்வரும் காலத்தில் கொடுப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் காணியின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | தும்பனே பிரதேச செயலகப் பிரிவில் கலபாவ சிறுவர் சிகிச்சை நிலையத்தின் நிர்மாணத்திற்காக ரூபா 860,305 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் தொழில் உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த அளவீட்டுப் பத்திரத்தில் நிறைவேற்றப்படாத 04 வேலைகளுக்காக மொத்தம் ரூபா 48,950 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இப்பட்டியல் ஆண்டின் இறுதியில் திசெம்பர் 29 ஆந் திகதி எமக்கு கிடைக்கப்பெற்றதுடன் திசெம்பர் மாதம் இறுதி வாரத்தில் 75 பட்டியல்கள் அளவில் பிரதேச சபையிடமிருந்த கிடைத்திருந்ததால் பரீட்சிக்கும் போது தவறொன்று இடம்பெற்றுள்ளதாகவும் தற்போது அக்குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அப்பட்டியலில் உள்ள குறைபாடுகளை தீர்வுசெய்வதற்காக அத்தொகையை பிடி காசிலிருந்து கழித்துக் கொடுப்பனவு செய்வதற்கு சபை மூலம் பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது அவ்வாறு கழித்து கொடுப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக | நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

## 3.7 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றும் செயலாற்றல் தகவல்கள் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020(i) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் செயலாற்றல் அறிக்கையை தயாரித்து சமர்ப்பிக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது கணக்கு, அபிவிருத்தி, காணி, சமுர்த்தி, பொறியியலாளர், குடிசன மற்றும் புள்ளிவிபரவியல், சமூக சேவைகள் (மதியுறை), சமூக சேவைகள் (முதியோர்), ஆகிய பிரிவுகளின் கீழ் செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட 40 நிகழ்ச்சித் திட்டங்களின் செயன் முன்னேற்றம் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020(i) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் செயலாற்றல் அறிக்கை தயாரித்து சமர்ப்பிக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | 2020 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள அனைத்து செயற்பாடுகளுக்குரிய செயலாற்றல்கள் செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை |

## 3.8 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த பெறுகை திட்டத்தில் ஒவ்வொரு பெறுகையையும் செயற்படுத்துவதற்கு | 2020 ஆம் ஆண்டின் போது பிரதான நிர்மாண செயற்திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளப்படாமையால் | பெறுகை வழிகாட்டல் திட்டத்தில் காலப்பகுதிகள் திட்டவட்டமாக குறிப்பிட |

| | | | |
|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட திட்டவட்டமான காலப்பகுதி இனங்காணப்படா திருந்ததுடன் அதற்குப் பதிலாக ''எதிர்வரும் ஆண்டினுள்'' என மாத்திரம் குறிப்பிடப்பட்டிருருந்தது. | பெறுகை திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதிகள் மற்றும் பூர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்ட திகதிகள் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளும் பெறுகைகளின் பிரகாரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | வேண்டும். |
| (ஆ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1(இ) வழிகாட்டலின் பிரகாரம் பெறுகை செயற்பாடுகள் விரிவாக தயாரிக்கப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன்.மாவட்ட செயலகம் மற்றும் 20 பிரதேச செயலகங்களில் 21 கணக்கு பிரிவுகளுக்காக மூலதன செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கப்படும் நிதிஏற்பாடு மட்டுப்படுத்தப்படாமையால் பெறுகை செயற்பாடு அறிவிக்கப்படவில்லையென | பெறுகை செயற்பாடுகள் விரிவாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (இ) | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1(உ) வழிகாட்டலின் பிரகாரம் 06 மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதியில் பெறுகை திட்டம் மாதாந்தம் நாளது வரையாக்கப்பட வேண்டுமெனவும் மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட வகையில் எதிர்காலத்தில் தேவையான சந்தர்ப்பங்களில் பெறுகை திட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | ஏதேனும் வேறுபாடொன்று இடம் பெற்றால் அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சுத்திகரிப்பு சேவையை வழங்குவதற்கு உரிய கேள்வி அழைப்பில் கேள்வி நிபந்தனைகளுக்கு இணங்க வியாபார பெயர்ப் பதிவுச் சான்றிதழ், தற்போது சுத்தகரிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றும் நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் கோரப்பட்டிருந்தன. கேள்வியை கருத்திற்கொள்ளும் போது அத்தேவைப்பாடுகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் போது அல்லது பெறுகை குழு தீர்மானத்தின் போது கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்த 12 நிறுவனங்கள் 5 மாதங்கள் போன்ற குறைந்த கால பதிவினை உடைய மற்றும் சேவை அனுபவம் | இனங்குவதாகவும் 2021 ஆம் ஆண்டில் அழைக்கப்பட்ட கேள்விகளுக்கு இடையே வெற்றிகரமாக கேள்விதாரரை தெரிவுசெய்யும் போது சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்ட வருடக் கணக்கு மற்றும் அனுபவம் என்பன கருத்திற் கொள்ளப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீடு செயற்பாட்டின் மூலம் கேள்வி அளிப்புச் செய்யப்பட்டிருந்ததாகவும் கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட வகையில் குறைபாடுகள் இல்லாமல் மதிப்பீடு செயற்பாடு மற்றும் வழங்கல் உட்பட பெறுகை | கிடைத்த அழைப்புக்களில் குறிப்பிடப்பட்ட கேள்வி நிபந்தனைகளை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகை குழு தீர்மானம் எடுக்கும் போது கருத்திற் கொள்ளல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொடர்பான எவ்வித தகவல்களும் சமர்ப்பிக்காத நிறுவனமொன்றுக்கு மீளாய்வாண்டின்போது மாவட்ட செயலக வளவு, கேட்போர் கூடம், கடுகஸ்தொட்ட பயிற்சி சேவகைள் நிறுவனம் மற்றும் 15 பிரதேச செயலகங்களின் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்கு உரிய கேள்வி வழங்கப்பட்டிருந்தது. | செயற்பாட்டை மேற்கொள் வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் | |

## 3.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தற்போது கங்கவட்ட கோரல பிரதேச உத்தியோகபூர்வ இல்லமாக பயன்படுத்தப்பட்டு வரும் கட்டிடத்தின் பின்பகுதி உத்தியோகபூர்வ விடுதிக்கு உரித்தல்லாத 27'x55' பரப்பளவிலான சிறிய கட்டிடமொன்றுடன் காணித் துண்டொன்று காணப்பட்ட போதும் அக்கட்டிடத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்தாமல் உருக்குலைந்து காணப்பட்டது. | உத்தியோகபூர்வ விடுதிக்கு உரித்தல்லாத 27'x55' பரப்பளவிலான சிறிய கட்டிடமொன்றுடன் கூடிய காணித் துண்டு முன்னர் காவலாளியின் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்ததாகவும் அலுவலக களஞ்சிய வசதிகள் இல்லாமையால் எதிர்காலத்தில் சுத்திகரிக்கப்பட்டு களஞ்சியத்திற்கு பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதாக | சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) மாவட்ட செயலகத்துக்குரிய 04 அரசாங்க வீடுகள் 2 ஆண்டுகளுக்கும் 8 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக சிதைவுற்ற நிலையில் காணப்படுவதன் காரணமாக பாவனைக்கு எடுக்க முடியாமல் இருந்தன. அந்த வீடுகளைப் பழுதுபார்த்து பாவனைக்கு ஏற்ற விதத்தில் மாற்றி உத்தியோகத்தர்களுக்கு வழங்குவது தொடர்பில் மாவட்ட செயலகம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் தேவையான நிதிஏற்பாடு கிடைக்காமை அடிப்படையில் திருத்த வேலைகளை செய்ய முடியாமல் போனதாக | வீடுகளைத் திருத்தம் செய்து செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |

**3.10 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்கீட்டு அவதானிப்புக்கள்** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2008 நவம்பர் 18 ஆம் திகதி விபத்திற்குட்பட்டிருந்த கங்கஇஹல கோறளை பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியின் விபத்திற்குரிய நட்டத்தின் அறவிடப்படாத 50 சதவீதம் அதாவது ரூபா 144,174 தொகை அரசிற்கு ஏற்பட்ட நட்டமாக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் விட்டுவிடல் கூற்றில் குறிப்பு (i) இல் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வாகன விபத்து காரணமாக அரசிற்கு ஏற்பட்ட ரூபா 144,174 ஆன நட்டத்தை நிதிக் கூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் விட்டுவிடல் தொடர்பான குறிப்பு I இல் உள்ளடக்கப்பட வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வதுடன் அது தவறுதலாக உள்ளடக்கப்பட வில்லையென | உரிய அனைத்து தகவல்களும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகத்திற்குரிய அப்லன்டஸ்வெலவில் அமைந்துள்ள 250/8 ஆம் இலக்க அரச இல்லத்தில் 2018 யூன் 28 ஆந் திகதி இடம்பெற்றிருந்த திருட்டு தொடர்பாக நட்டத்தை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட அரச இல்லத்தில் இடம்பெற்ற திருட்டு தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு அடுத்த நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (இ) | உடபலாத்த பிரதேச செயலகத்தின் 2017 மே 25 ஆந் திகதி விபத்திற்குட்பட்ட உத்தியோகபூர்வ கெப் வண்டியின் மதிப்பிடப்பட்ட மொத்த நட்டமான ரூபா 2,223,927 இல் மேலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 210,093 தொகையை சாரதியிடம் அறவிடுவது தொடர்பாக சட்டமா அதிபருக்கு 2019 சனவரி மாதத்தின் போது அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதும் 2021 ஏப்ரல் மாதம் வரை அந்நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | விபத்திற்குப் பொறுப்பான சாரதி மரணித்துள்ளதாகவும் அவரின் சட்டரீதியான வாரிசுகள் தொடர்பான தகவல்கள் 2021.03.13 ஆந் திகதிய KDS/UDP/1/1/VEH/9 ஆம் இலக்க உடபலாத பிரதேச செயலாளரால் கடிதத்தின் மூலம் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | நட்டத்திற்கு பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 நவம்பர் 22 ஆம் திகதிய BD/GPS/130/9/4/MC-8 ஆம் இலக்க தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளரின் கடிதத்தின் 2 ஆம் பந்தியில் ஒரு உத்தியோகத்தருக்கு ஒரு மோட்டார் சைக்கிள் மாத்திரம் உரித்தாவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2014 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக்கொண்ட 07 வெளிக்கள உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்காக தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு சலுகை அடிப்படையில் வழங்கப்படும் மோட்டார் சைக்கிள்களையும் பெற்றுக் கொண்டிருந்த போதும் அவர்களிடமிருந்து ஒரு மோட்டார் சைக்கிளுக்கான சந்தைப் பெறுமதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேற்படி விடயத்திற்குரிய 07 உத்தியோகத்தர்கள் தங்களால் பெற்றுக்கொண்ட மோட்டார் சைக்கிளின் சந்தைப் பெறுமதியை 2021.05.20 ஆந் திகதிக்கு முன்னர் மாவட்ட சமுர்த்தி பிரிவிற்கு கொடுப்பனவு செய்து பட்டியலைச் சமர்ப்பிக்குமாறும் அவ்வாறு கொடுப்பனவு செய்வதற்கு தவறினால் அப்பணத்தை தவணைய ரீதியில் சம்பளத்தில் இருந்து அவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.12 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்காக தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்திற்கு 383 நாட்கள் சேவை வழங்காதிருக்கையில் ஒப்பந்தத்தின் பிரகாரம் மாதாந்தம் ரூபா 355,553 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது, அதன் பிரகாரம் உடன்படிக்கையின் படி மாவட்ட செயலகத்தினால் ஊழியர் சேமலாப நிதிய | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை ஏற்றுக்கொள்வதாகவும் சுத்திகரிப்பு சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்பு கிடைக்கின்றதா என கண்டு பிடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கொடுப்பனவு தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பங்களிப்பாக ரூபா 62,196 வீதமும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ரூபா 15,549 வீதமும் மாதாந்தம் சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு செய்யப்பட்டிருந்த போதும் சுத்தகரிப்பு நிறுவகத்தினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 234,643 தொகை குறைத்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கங்கவட்டகோரலை பிரதேச செயலகத்தின் உத்தியோக விடுதியாக தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் அருப்பல தேவாலவத்த 27/4 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள காணியின் உரித்தினை முறையாக கையேற்கப்பட்டிருக்கவில்லை. நன்கொடையாக கிடைத்த இக்காணி மாவட்ட செயலகத்திற்கு கையேற்பதற்கு நவடிக்கை எடுத்தலில் தாமதம் காரணமாக 4 ½ ஆண்டுகள் கடந்திருந்தும் அதனை கையேற்க முடியாமல் இருந்தது. | இக்காணியை முறையாக பொறுப்பேற்பதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தி டமிருந்து மதிப்பீட்டு அறிக்கை கோரப்பட்டிருநததாகவும் 2021.04.30 இல் உள்ளவாறு அந்த அறிக்கையை தருவதாக மதிப்பீட்டுத் திணைக்களம் இணங்கியிருந்த போதும் அதன் உத்தியோகத்தருக்கு கொவிட் 19 தொற்றின் பேரில் அது தாமதமடைந்தது. 2021.05.17 ஆந் திகதி ஆரம்பமாகும் வாரத்திற்குள் இம்மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொண்டு எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பதாக | நிறுவனம் தமது சொத்துக்களை கையேற்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | கங்கவட்டகோரலை பிரதேச செயலகத்தினால் மீளாய்வாண்டின் ரூபா 7,722,000 ஆன பட்டியல் பெறுமதியுடைய 07 சுவர்கள் மற்றும் வடி காண் நிர்மாணச் செயற்திட்டங்களுக்காக ஆய்வுகூட பரிசோதனை (Lab Test) அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பிரதான பொறியியலாளின் ஆலோசனை பெற்றுக்கொள்வதற்கு குறித்துக் கொண்டுள்ளதாக அறிய தருகின்றேன் | ஓரச் சுவர் மற்றும் வடி காண் தொடர்பாக ஆய்வுகூட பரிசோதனை (Lab Test) அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | தெரிவுப் பரிசோதனை 02 பிரதேச செயலகங்களில் 36 சந்தர்ப்பங்களில் காணிகளைக் கையேற்பது தொடர்பாக, 3 ஆண்டுகள் தொடக்கம் 25 ஆண்டுகள் கால தாமதம் காணப்படுவதோடு, அக் காரணத்தால் காணிகளை கையேற்றதால் எதிர்பார்த்த இலக்குகளை நிறைவேற்ற | காணிகளைக் கையேற்கும் செயற்பாடுகளின் போது பல அரச நிறுவனங்கள் தொடர்புபடுவதுடன் அச்செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது (நில அளவை, விலை மதிப்பீடு, வனப் பாதுகாப்பு, காணி அமைச்சு, சுற்றாடல் அமைச்சு) அதற்காக காலம் எடுப்பாகவும் ஆரம்ப உரித்தாளர்கள் உயிருடன் | காணி கையேற்றல் நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முடியாமல் இருந்தது. | இல்லாதிருத்தல் போன்ற விடயங்கள் அடிப்படையில் காணிகளின் எல்லைகளை காண்பிப்பதற்கு எந்தவொருவருக்கும் தெரியாமல் இருப்பதால் அளவீட்டு நடவடிக்கைகள் உட்ப மதிப்பீட்டு செயற்பாடுகளை மேற்கொள்வது சிரமமாக இருப்பதாகவும் காணிகளின் உரிமையாளர்கள் இச்செயற்பாடுகளுக்கு தொடர்பு படுத்துவதற்கு தற்போது குடியிருக்கும் இடங்களைத் தேடிக் கொள்ள முடியாமை போன்றவை தாமதங்களுக்கு காரணங்களாக இருப்பதாக | |
| (உ) | 2017 யூன் 20 ஆந் திகதிய 04/2017 ஆம் இலக்க மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைத்த மற்றும் வழங்கிய போஷாக்கு உறுதிச் சீட்டுக்களின் சரியானதன்மை குழுவொன்றினால் கணக்கிடப்பட்டு அழிக்கப்பட வேண்டும். எனினும் இதுவரை 2017 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு அதன் மூலம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் கூப்பன்களுக்குரிய கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு 2020 மே மற்றும் யூன் மாதங்களில் 08 பிரதேச செயலகங்களினால் மாத்திரம் அழிக்கப்பட்டிருந்தன. அத்துடன் போஷாக்கு கூப்பன்களை அழிப்பதற்காக குழுவொன்று நியமிப்பதற்கு இதுவரை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை | 2015 ஆம் ஆண்டில் இந் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆவணங்களை அழிப்பதற்கு 5 வருடங்கள் பூரணமாக இருக்க வேண்டுமெனவும் அதன் பிரகாரம் 2020/03/02 ஆந் திகதிய 4/2017-(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் மீண்டும் அறிக்கை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட் டுள்ளதாகவும் அதன் பிரகாரம் 2021/01/15 ஆந் திகதி சிறுவர் செயலகத்திலிருந்து கிடைத்த கடிதத்தின் பிரகாரம் பிரதேச செயலகத்தினால் கூப்பன்களையும் உறுதிச்சீட்டுக் களையும் அழித்தல் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதுவரை 08 பிரதேச செயலகங்களினால் குழு அங்கீகாரத்தின் பின்னர் அதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகம் ஒட்டுமொத்த நிறுவனமாக கருத்திற் கொள்ளும் போது திட்டவட்டமாக தீர்மானிக்கப்படும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்படவில்லை. | மாவட்ட செயலகத்தின் வெவ்வேறு நோக்கங்கள் மற்றும் இலக்குகளை ஒன்றாக்கி கண்டி மாவட்டம் இலங்கையின் சிறந்த நிர்வாக நிறுவனமொன்றாக நிலைபேறான அபிவிருத்தி யை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு பிரிவிலும் நிலைபேறான நோக்கங்கள் மற்றும் இலக்குகளை வேறாக இனங்கண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக | திரட்டிய வகையில் நோக்குகளை நிறைவேற்றக்கூடிய வகையில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் சரியாக தீர்மானிக்க வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றல் படை மூலம் குறைந்த வருமானம் பெறுவோருக்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 2020 பெப்ரவரி 20 ஆந் திகதிய 06/2020 ஆம் இலக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் குறைந்த வருமானத்தைப் பெறும் 100000 பேருக்கு தொழில் வழங்கும் போது ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகப் பிரிவில் 40 கிராமசேவையாளர் பிரிவுகளில் தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளின் வரிசை கிரமத்தை கருத்திற் கொள்ளாமல் 132 விண்ணப்பதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தன. | 2020 சனவரி 21 ஆந் திகதிய PS/GPA/Circular/04/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 2020.01.21 ஆந் திகதிய HA/05/04 மற்றும் 2020.06.18 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள 573 விண்ணப்ப தாரிகள் உள்ளடக்கப்பட்ட புத்தகமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. முதல் பக்கத்தின் பொழிப்பொன்று உள்ளடக்கி பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றல் படையணி திணைக்களத்திற்கு | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | வழங்குவதற்கு அறிவிக்கப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாகவும் 132 விண்ணப்பதாரிகளுக்கு நியமனம் வழங்குவது தொடர்பாக பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றல் படையணித் திணைக்களமே நடவடிக்கை எடுத்திருந்ததாகவும். |

## 6 மனிதவள முகாமைத்துவம்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------------- | ------------------ | --------------------------------------- |
| (அ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் மாவட்ட செயலகத்தில் 08 பதவிகளில் 09 வெற்றிடங்களும் 20 பிரதேச செயலகங்களில் 333 வெற்றிடங்களுமாக 342 வெற்றிடங்கள் காணப்பட்டன. | உத்தியோகத்தர்களின் இடமாற்றம், ஓய்வுபெறல், இறத்தல் போன்ற காரணங்களால் பதவிகள் வெற்றிடங்களாக இருந்ததுடன் அது தொடர்பாக மூன்று மாதங்களுக்கு ஒரு முறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதாகவும் பொது நிர்வாக, உள்ளூராட்சி மன்ற அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்பின் பிரகாரம் அவ்வெற்றிடங்கள் நிரப்புதல் இடம்பெறுவதாகவும் | சிறந்த சேவையொன்றை வழங்குவதற்காக வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கண்டி மாவட்டத்தின் 20 பிரதேச செயலகங்களில் 1187 கிராம சேவையாளர் பிரிவுகளில் 141 கிராம சேவையாளர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. | கண்டி மாவட்டத்தின் பிரதேச செயலகங்களுக்காக கிராம சேவையாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதாக | சிறந்த சேவையொன்றை வழங்குவதற்காக வெற்றிடங்களைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கங்கவட்ட கோரளே பிரதேச செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக மாவட்ட பதிவாளர் பதவியொன்று மாத்திரம் காணப்பட்ட போதும் அந்த அலுவலகத்தில் இரண்டு உத்தியோகத்தர்களும் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 02 ஆக இருந்த போதும் மூன்று பேர் சேவை புரிகின்றனர். | 2015 ஆம் ஆண்டில் காணி பதிவாளர் அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த கடமைகள் பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்டமை, 2014 ஆம் ஆண்டில் மாவட்டத்தின் குறித்த பிறப்பு, விவாக சான்றிதழ் நிகழ்நிலை (Online) மூலமாக வழங்கும் வேலைத்திட்டத்தின் காரணமாக நகர அலுலகமொன்றான இந்த அலுவலகத்தின் கடமைகள் கூடுதலாக இருத்ததன் காரணமாக இரண்டு மேலதி மாவட்ட பதிவாளர்கள் திணைக்களத்தினால் இணைக்கப்பட்டதாகவும் இப்பிரிவில் இரண்டு தேர்தல் தொகுதிகள் காணப்படுவதால் சேவை தேவைப்பாட்டின் பேரில் இரண்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு மேலதிக ஒரு உத்தியோகத்தர் இணைக்கப்பட்டுள்ளதாகவும் | மிகை பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்ளவோ அல்லது மிகை பதவியணியினரை இடமாற்றம் செய்வதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |